**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2023**
**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு: பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாவகைகள் எத்தனை?அவை யாவை?
2. புதுக்கவிதையின் வளர்ச்சிக்கு வித்திட்ட இதழ்களுள் இரண்டனைக் கூறுக.
3. வெள்ளை இருட்டு– ஆசிரியர் யார்?
4. தமிழின் முதல் நாவல் எது? அதன் ஆசிரியர் யார்?
5. நேரசை அமையும் முறை யாது?
6. தொன்மம் என்பது என்ன?
7. கதைப்பின்னல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
8. நாவலில் பாத்திரப்படைப்பின் இருவகைகளைக் குறிப்பிடுக.
9. பின் நவீனத்துவ நாவல்கள் இரண்டனைக் குறிப்பிடுக.
10. புதுமைப்பித்தனின் வழி சிறுகதை எதை விளக்குகிறது?
11. பின் தொடரும் நிழலின் குரல் – ஆசிரியர் யார்?
12. தமிழில் சிறுகதை மன்னன் என்று அழைக்கப்பட்டவர் யார்?
13. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் எழினிகள் யாவை?
14. திருக்குறளைத் தம் நாடகங்களில் புகுத்தியவர் யார்?
15. பேரறிஞர் அண்ணாவின் உரைநடையைப் பற்றி ம.செ.இரபிசிங் கூறியது என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. நகைத்துளிப்பா– குறிப்பு வரைக.
2. தொடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. கவிஞர் இன்குலாப் – குறிப்பு வரைக.
4. தலித் நாவல்கள்–குறிப்பு வரைக.
5. சிறுகதைக்கான மொழிநடை குறித்து இயம்புக.
6. புதுமைப்பித்தனின் ஒரு நாள் கழிந்தது சிறுகதையைப் பற்றி எழுதுக.
7. தெருக்கூத்தின் உள்ளடக்கத்தை விளம்புக.
8. இறையனார் அகப்பொருள் உரையின் தனித்தன்மைகளைக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

**1.** (அ) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பெண்ணிய நாவல்களைப் பற்றி விளக்கியுரைக்க

**2.** (அ) தொன்மைக் கால உரைநடையைப் பற்றி விவரித்துரைக்க .

(அல்லது)

(ஆ) இறையன்பின் சிறுகதைகள் குறித்து விளக்கியுரைக்க.

**3.** (அ) தமிழில் நாடகக்கலையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியங்களின் உத்திமுறைகளைப் புலப்படுத்துக.

❋❋ ❋